**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

**Calendar :**
**Miscellaneous :**
**Preliminary Register : Case No. CC/40/2007**
**Sessions :**
**Prosecution**
**Deposition of witness for : PW 3 / LW 7**
**Name ..** திருமதி. ரஞ்சனி
**Father's/Husband's Name ..** திரு. சீனிவாசன்
**Village**
**Taluk ..**
**Caste ..**
**Calling ..**
**Religion ..**
**Age .. 70**

**Date: 19/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

1. நான் இராயபுரம் காவல் நிலையத்தில் பணி செய்து ஓய்வு பெற்றேன். கடந்த 2006ம் ஆண்டு திருவொற்றியூர் மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருந்த போது எனக்கு முன்னால் இருந்த

ஆய்வாளர் பானுமதி 17.11.2005 நீதிமன்ற ஆணையின் பெயரில் நிலைய குற்ற எண். 14/2005 சட்டப்பிரிவுகள் 406, 498(A), 506(ii) r/w 34 இ.த.சாவின் கீழ் முதல் தகல் அறிக்கை பதிவு செய்து நீதி மன்றத்தில் சமர்ப்பித்தார்கள். (**முதல் தகவல் அறிக்கை அ.ச.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. மாலதி, லோகநாதன் மற்றும் மல்லிகா ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். ஆய்வாளர் பானுமதி பணி மாறுதலில் சென்று விட்டதால் வழக்கு கோப்பினை மேல் விசாணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கு சாட்சிகளை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் தேவி, லட்சமி ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். விசாரணை முடித்து எதிரிகள் சங்கர், கஸ்தூரி, குமாரி மற்றும் லதா ஆகியோர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை** :-

3. புகார் மனு யாரால் எழுதப்பட்டது என்றால் நீதிமன்ற உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. குற்றம் நிகழ்ந்த நாள் என்று என்றால் 1992 திருமணம் ஆனது அதிலிருந்தே பிரச்சனை என்று உள்ளது. என்று எவ்வாறு கொடுமை நிகழ்ந்தது என்பதனை

குறிப்பிட்டு புகாரில் சொல்லாத காரணத்தினாலும், அதனை தங்கள் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லாத காரணத்தினாலும், புகாருக்கான மூல காரணத்தினை விசாரணையில் நிறுபணம் செய்யாத காரணத்தினாலும் சாட்சிகள் அனைவரும் சரிவர விசாரணை செய்யாமல் நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2025.11.19 14:03:50 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்